<u>கரூர் மாநகராட்சி</u>

**2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம்தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

<u>பொருள்கள்</u>

**1.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு–**1**, பிளாக்–**55**, நகரளவு எண்.**3026** மற்றும் வார்டு–**1**, பிளாக்–**56**, நகரளவு எண்.**3027/3**Bல் **16169.50** ச.மீ (**3** ஏக்கர் **43,359** சதுரடி) பரப்பளவு இடமானது தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளியிடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், **1959**ன் படி விளையாட்டு மைதானமாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியாகும். இவ்விளையாட்டு மைதானத்தின் ஒருபகுதியில் ஏற்கனவே உள்ள ராஜலிங்க மன்றத்தை இடித்துவிட்டு அதேபகுதியில் **622.7** சதுர மீட்டர் பரப்பளவில் **6.90** கோடி மதிப்பீட்டில் புதியதாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய நூலக கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக விளையாட்டு மைதானத்திலிருந்து விலக்களித்து அனுமதி வழங்க கோரி இம்மாமன்ற தீர்மானம் எண்.**1652**, நாள்.**28.12.2023**ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடித எண்.**1064**/மாந**4/2024–4** நாள்.**30.10.2024**–ல் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளியிடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் **1959**, பிரிவு **4(2)**–ன் கீழ் விளையாட்டு மைதானங்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பகுதியிலிருந்து மேற்படி சட்டத்தின் பிரிவு **5(4)**–ன் படி திரும்ப பெற அறிவிக்கை வெளியிட உரிய மாமான்றம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளூர் திட்டக்குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திருவள்ளுவர் விளையாடுமிடமாக அறிவிக்கை செய்யப்பட்ட நகரளவு வார்டு–**1**, பிளாக்–**55**, நகரளவு எண்.**3026** மற்றும் நகரளவு வார்டு–**1**, பிளாக்–**56**, நகரளவு எண்.**3027/3**Bல் **16169.50** ச.மீ (**3** ஏக்கர் **43,359** சதுரடி) பரப்பளவுள்ள இடத்திலிருந்து புதிய மாவட்ட மத்திய நூலகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள வார்டு–**1**, பிளாக்–**55**, நகரளவு எண்.**3026**ல் **228.00** ச.மீ மற்றும் நகரளவு வார்டு–**1**, பிளாக்–**56**, நகரளவு எண்.**3027/3**Bல் **1732.00** ச.மீ என மொத்தம் **1960.00** ச.மீ பரப்பளவுள்ள இடத்தினை மட்டும் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளியிடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் **1959**, பிரிவு **4(2)**–ன் கீழ் விளையாட்டு மைதானங்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பகுதியிலிருந்து மேற்படி சட்டத்தின் பிரிவு **5(4)**–ன் படி திரும்ப பெற அறிவிக்கை வெளியிட உள்ளூர் திட்டக்குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இயக்குநர் மூலமாக அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(0358/2023/எப்1)**

**தீர்மான எண்.2082** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**2.**கரூர் மாநகராட்சி பகுதியில் நமக்கு நமே திட்டம் **2022–2023**ம் ஆண்டின் கீழ் மண்டலம்–**4**, வார்டு எண்.**48**, தாந்தோணி கிராமம், சர்வே எண்.**582**ல் பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ள இடத்தில் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் பணிக்கு ரூ.**5.00** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு கரூர் மாமன்ற தீர்மான எண்.**1221**, நாள்.**26.06.2023**ல் ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதனை தொடாந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**37129–3/2022**/பி1 நாள்.**08.06.2023**ல் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–**4**, வார்டு எண்.**48**, தாந்தோணி கிராமம், சர்வே எண்.**582**ல் பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ள இடத்தில் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் பணிக்கு ரூ.**5.00** கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியினை மேற்கொள்வதற்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண். **18448/2023**/DO1, நாள்.**04.07.2023**ல் தொழில்நுட்ப பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு **23.08.2023**ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியினை தொடங்குவதற்கு ஏதுவாக ஏற்கனவே அங்குள்ள பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலக கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு இடத்தினை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் கடித ந.க.எண் .ஜி**1/23222/2022** நாள். **13.01.2024–**ம் தேதி கல்லூரி கல்வி இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் மேற்படி பணியினை துவங்க ஏதுவாக ஏற்கனவே அங்குள்ள பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு அக்கட்டிடத்தின் உறுதித்தன்மை மற்றும் அக்கட்டிடத்தின் மறுபயன்பாட்டிற்கான பொருட்களை மதிப்பு ஆகியவை கணக்கீடு செய்து தருமாறு பொதுப்பணித்துறை, கரூர் அவர்களின் மூலமாக கேட்டுக்கொண்டதற்கிணங்க செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டிடங்கள் (க&ப) கோட்டம், கரூர் அவர்களின் கடித எண்.Lr.No.302/F47/2024/DB, dated.10.10.2024ல் மேற்படி பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு அக்கட்டிடத்தின் உறுதித்தன்மை மற்றும் அக்கட்டிடத்தின் மறு பயன்பாட்டிற்கான பொருட்களின் மதிப்பு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| Name of the Buildng to be dismantled | RPB No | Year of Construction | Book Value in Rupees |
|---|---|---|---|
| Old Office Building of Superintendent of Police, Karur (Old Paid Hostel Building of Government Arts College, Karur) | Not Available | 1974 (Based on local Enquiry) | Not Available |

Necessary cost involved for dismantling the building and assessed value for retrieved materials are furnished as below

| Name of the Building | Age of the Building in years | Cost of retrieved materials after depreciation in Rs | Cost for dismantling in Rs | Value of Revenue to Government in Rs. |
|---|---|---|---|---|
| Old Office Building of Superintendent of Police, Karur (Old Paid Hostel Building of Government Arts College, Karur) | 50 (Based on local enquiry) | 14,86,194 | 14,26,248 | 59,946 |

Total cost of retrieved materials after depreciation : Rs.14,86,194/-

Total Cost involved for dismantling theabove building : Rs.14,26,248/-

Net Value of revenue to the Government : Rs. 59,946/-

அதனை தொடர்ந்து மேற்படி பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலக கட்டிடத்தினை இடித்துவிட்டு புதியதாக கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கோரியதில் மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் கடித ந.க.ஜ1/23222/2022, நாள்.05.11.2024ல் அரசாணை (நிலை) எண்.456 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில முடிவு அலகு 4(2) பிரிவு நாள்.28.10.2024ல் தாந்தோணி கிராமம் புல எண்.582/B2A ல் மொத்த விஸ்தீரணம் 1.98.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு கல்லூரி விடுதி என வகைப்பாடு செய்யப்பட்ட 0.13.00 ஹெக்டேர் இடத்தில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு நிலக்கிரையமின்றி நில மாற்றம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தி.ல் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு, ஏற்கனவே அங்குள்ள பழைய காவல் கண்காணிப்பு அலுவலக கட்டிடத்தினை உரிய அரசு விதிமுறைகளை பின்பற்றி இடித்து அப்புறப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 06.11.2024ம் தேதி இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் மூலமாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு சொந்தமான தாந்தோணி கிராமம் புல எண்.582/B2A ல் மொத்த விஸ்தீரணம் 1.98.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு குறிப்பு கலத்தில் கல்லூரி விடுதி என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் 0.13.00ஹெக்டேரில் கரூர் மாநகராட்சியின் மூலம் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதி கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் கரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக தொலைபேசி செய்தியில் அரசாணை எண்.22 சமூக நலம் மற்றும் ஊட்டச்சத்து உணவு திட்டம் (SW3(1)) துறை நாள்.28.05.2019 ன் படி அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதியினை கட்ட கட்டுமான பணிகள் தமிழ்நாட்டில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஆதாரம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கார்ப்பரேசன் லிமிடெட் (TNIFMC) மூலம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட புல எண் 582/ B2A ல் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதி கட்டும் பணியினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மேற்படி இடத்தில் கரூர் மாநகராட்சி மூலம் ''நமக்கு நாமே'' திட்டம் (2022–2023) ன் கீழ் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதி கட்டும் பணியினை மேற்கொள்ள ரூ.5.00 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டு உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு அரசாணை எண்.158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.11.2022ன் படி பணி ஆணை 23.08.2023 அன்று வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்போது இதே இடத்தினை அரசாணை எண்.456 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நிலமுடிவு அலகு 4(2) பிரிவு நாள்.28.10.2024ன்படி சமூக நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் (தாந்தோணி கிராமம் புல எண்.582–B2A பரப்பு 0.13.00 ஹெக்டேர்) இவ்விடத்தில் அரசாணை எண்.22 சமூக நலம் மற்றும் ஊட்டச்சத்து உணவு திட்டம் (SW3(1)) துறை நாள்.28.05.2019ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய பெண்களுக்கான தங்கும் விடுதி கட்டும் பணியினை இம்மாநகராட்சி மூலமாக மேற்கொள்ளவும், கட்டடம் கட்டி முடித்த பின்பு சமூக நலத்துறை வசம் ஒப்படைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/9004/2021)

**தீர்மான எண்.2083** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது